தினமணி

பலன் தரும் பசுந்தீவனச் சாகுபடி!

First Published : 05 Jul 2012 12:51:55 AM IST



தருமபுரி: நமது நாட்டில் வேளாண்மை மற்றும் கால்நடைகள் இணைந்த கலப்புப் பண்ணை முறையே கையாளப்பட்டு வருகிறது. தரமான கால்நடை வளர்ப்புக்கும், அதிக வருமானம் பெறவும் பசுந்தீவனப் பயிர்களை சாகுபடி செய்வது அவசியம்.

கால்நடைகளுக்கு புரதம், நார்ச்சத்து, உயிர் மற்றும் தாதுச் சத்துகளை அளிப்பதுடன் கால்நடைகளின் உடல் வெப்பநிலைக் கட்டுப்பாட்டிலும் பெரும் பங்கு வகிக்கிறது பசுந்தீவனம். சரியான இனப் பெருக்கத்துக்கும் இது இன்றியமையாதது.

பசுந்தீவனத்தை பயிர் செய்வதன் மூலம் நிலத்தின் மண்வளம், மண்ணின் நீர் தாங்கும் திறன் அதிகரிக்கிறது. களைகள் மற்றும் தேவையற்ற புல், பூண்டுகளின் வளர்ச்சி தடுக்கப்படுகிறது. பயறு வகை பசுந்தீவனங்களை வளர்ப்பதால் மண்ணில் தழைச்சத்தின் வளம் கூடுகிறது.

பசுந்தீவனப் பயிர்களை தேர்ந்தெடுக்கும் முன் முக்கிய அம்சங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். பயிர் சாகுபடி முறை எளிதாக இருக்க வேண்டும். குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் தர வேண்டும். ஊட்டச்சத்து செறிவுள்ளதாகவும் இருக்க வேண்டும். காலநிலை மற்றும் மண் அமைப்பு பாதகமாக மாறினாலும், விளைச்சலில் பாதிப்பு இருக்கக் கூடாது. பூச்சி மற்றும் நோயால் பாதிக்கப்பட கூடாது.

பசுந்தீவன வகைகள்: புல்வகைத் தீவனப் பயிர், தானிய வகைத் தீவனப் பயிர், பயறு வகைத் தீவனப் பயிர், மர வகைத் தீவனப் பயிர் ஆகியவை பசுந்தீவனங்களாகும்.

புல் வகை: இந்தத் தீவனத்தில் புரதச்சத்து 1.5 சதம் முதல் 2 சதம், நார்ச்சத்து 6.25 சதம் முதல் 9 சதம் வரை இருக்கும். இறவைப் பயிராக நேப்பியர், கம்பு ஒட்டுப்புல் கோ-1, கோ-2, கோ-3 பயிரிடலாம். கினியாப் புல், பாரா புல், கொளுக்கட்டைப் புல் பயிரடலாம. மானாவரியாக கொளுக்கட்டை புல், தீனாநாத் புல் ஆகியவை பயிரிடலாம்.

தானிய வகை: இறவையாக மக்காச் சோளம் பயிரிடலாம். மானாவரியாக தீவனச் சோளம், தீவனக் கம்பு பயிரிடலாம்.

பயறு வகை: பசுந்தீவனத்தில் பயறு வகைகள் முக்கியமானதாகும். ஏனெனில், இந்த வகை தீவனத்தில் 3 சதம் முதல் 4 சதம் வரை புரதச் சத்தும், கால்சியமும் செறிந்துள்ளது. தானிய வகை பசுந்தீவனத்துடன், பயறு வகை தீவனத்தை 70:30 விகிதத்தில் கலந்து கொடுப்பது அவசியம். பயறு வகையால் வேர் மூலம் மண்ணில் நைட்ரஜன் நிலைப்படுத்தப்பட்டு தழைச்சத்து வளம் அதிகரிக்கிறது.

பயறு வகைகளில் இறவையாக வேலி மசால், முயல் மசால், தீவனத் தட்டைப் பயறு, காராமணி, துவரை பயிரிடலம். மானாவரியாக முயல் மசால், சிராட்ரோ, டெஸ்மோடியம், சென்ட்ரோ, சங்கு புஷ்பம், கொள்ளு, துவரை பயிரிடலாம். குளிர்ப் பிரதேசங்களில் பெர்சீம், மொச்சை வகைகளைப் பயிரிடலாம்.

கலப்பு பயிரிடுதல் முறை: பயறு வகை தீவனப் பயிர்களையும், தானிய வகைத் தீவனப் பயிர்களையும் கலப்புப் பயிராகக் கலந்து பயிரிடும்போது தனித்தனியே கிடைக்கும் மகசூலை விடவும் கூடுதலாக மகசூல் கிடைக்கும். கோ 1, 2, 3 ஆகியவற்றை 3 வரிசையாகவும், வேலி மசால் ஒரு வரிசையாகவும் கலந்து பயிரிடலாம். தீவனச் சோளம் 2 வரிசை, சோயா மொச்சை ஒரு வரிசையாகவும் பயிரிடலாம். கொளுக்கட்டை புல் 3 வரிசை, முயல் மசால் ஒரு வரிசையாகவும் பயிரிடலாம்.

பசுந்தீவனச் சேமிப்பு: மழைக் காலத்தில் பசுந்தீவனப் பயிர்கள் உபரியாக இருக்கும். அவற்றை பதனப் பசுந்தீவனம், ஊறுகாய் புல், சைலேஜ் முறையில் சேமித்து வைக்கலாம்.

சைலேஜ் தயாரிக்க உகந்த தீவனப் பயிர்களும், தக்க அறுவடைத் தருணமும்: வீரியப் புல் கோ 1, 2, 3 ஆகியவை பூக்கும் தருணத்தில் அறுவடை செய்ய வேண்டும். தானிய வகை சோளம், மக்காச் சோளம் ஆகியவற்றில் தானியங்கள் பால் பிடிக்கும் தருணத்தில் அறுவடை செய்யலாம். பயறு வகை குதிரை மசால் 25 முதல் 30 சதம் பயிர்கள் பூக்கும் தருணத்திலும், வேலி மசால், காராமணி தருணத்திலும் அறுவடை செய்யலாம்.

பயறு வகைத் தீவனங்களைப் பதப்படுத்தினால் புரதச்சத்து சிதைந்து பலன் குன்றிவிடும். எனவே, அவற்றைப் பிற வகைத் தீவனப் பயிர்களுடன் 1:3 என்ற விகிதத்தில் கலந்து பதப்படுத்தலாம். சைலேஜ் தயாரிக்க பசுந்தீவனங்களைக் காற்றுப் புகாத இடத்தில் மூடி வைத்து சேமிக்க வேண்டும். இதற்குப் பயன்படும் அமைப்புகள் சைலோ எனப்படும்.

உபரியாக கிடைக்கும் பசுந்தீவனத்தின் அளவு, கால்நடைகளின் எண்ணிக்கை, நிலப்பரப்பு, நில அமைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சைலோவின் அமைப்பும், எண்ணிக்கையும் தீர்மானிக்கப்படும்.

சைலேஜ் தயார் செய்யும் முறை: பசுந்தீவனத்தை சுமார் 2 மணி நேரம் முதல் 3 மணி நேரம் சூரிய ஒளியில் உலர்த்தி ஈரப்பத அளவை 60 சத அளவில் குறைத்து, பயிரை 2 முதல் 3 அங்குலத்


துண்டுகளாக நறுக்கி சைலோவில் இட்டு அடுக்கடுக்காக அடுக்கி வர வேண்டும். சுமார் ஓர் அடி உயரம் வந்த பின்னர், தீவனத்தை நன்கு அழுத்தி இடையே உள்ள காற்றை வெளியேற்ற வேண்டும்.

பின்னர், அதன் மேல் 2 சதம் வெல்லப்பாகு அல்லது சர்க்கரை ஆலைக் கழிவுப் பாகு (மொலாசஸ்) மற்றும் ஒரு சதம் உப்புக் கரைசலைத் தெளிக்க வேண்டும். மீண்டும் பசுந்தீவனத்தை அடுக்க வேண்டும்.

இதே முறையில் சைலோவை நிரப்பி காற்றுப் புகாதவாறு மூடிவிட வேண்டும். பின்னர், 2 முதல் 3 மாதங்களுக்குப் பிறகு இவற்றை கால்நடைகளுக்கு வழங்கலாம். பசுந்தீவன சாகுபடிக்கு குறிப்பிட்ட சில வகைகளுக்கு அரசு 100 சதம் மானியமும் வழங்குகிறது.

## வண்டுகள், புழுக்களிடம் இருந்து விதைகளைப் பாதுகாப்பது எப்படி?

First Published : 05 Jul 2012 12:52:35 AM IST



உளுந்து, நெல், பச்சைப்பயிறு

புதுச்சேரி: ஒரு விதை தான் பெரும் விருட்சம் ஆகும் என்பது பழமொழி. விதையின் ஆரோக்கியமே விவசாயத்துக்கு அடிப்படையானது. அவ்வாறு மிக முக்கியத்துவம் வாய்ந்த விதைகளை பாதுகாக்கும் முறைகள் குறித்து இங்கு காண்போம்.

விதை மற்றும் தானிய மணிகளைத் தாக்கும் பூச்சிகள் பெரும்பாலும் வண்டுகள் மற்றும் புழுக்கள் இனத்தைச் சேர்ந்தவைதான். இவைகளை முறையான வழிகளை கையாண்டு கட்டுப்படுத்தலாம். அறுவடைக்குப் பின் தானியங்கள், விதைகள் ஆகியவை அறைகள், குதிர்கள், மாவு அரைக்கும் ஆலைகள் போன்ற இடங்களில் சேமித்து வைக்கப்படுகின்றன. அந்த இடங்களில் தான் பெரும்பாலும் விதைகளை வண்டுகள் மற்றும் புழுக்கள் சேதப்படுத்துகின்றன. சுமார் 40 வகையான பூச்சிகள் தாக்குவதால், விதைகள் 5 சதம் வரை குறைகின்றன.

தானியம் மற்றும் விதைகளை தாக்கும் பூச்சிகள், முதலில் உள்பகுதியை குடைந்து சத்துப் பகுதி முழுவதையும் உண்டுவிடும். பிறகு வெற்று ஓட்டையை மட்டும் விட்டுச் செல்கின்றன.

இந்த வகை தானியங்களால், அதன் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களை வழங்க முடியாது.

எனவே, விதைகளை சேகரிப்பதில் பாதுகாப்பான முறையைக் கையாண்டால் இவ்வாறான பாதிப்புகள் ஏற்படாது.

 விதைகளை சேகரிக்கும் முறைகள் குறித்து பூச்சியியல் வல்லநுர் நி. விஜயகுமார் கூறியதாவது: விதைகளை சேமிக்க, புதிய கோணிப்பைகளையே பயன்படுத்த வேண்டும். சேமிப்பு கிடங்குகளையும், சேமித்து வைக்கும் அறைகளையும் சுத்தமாக வைத்திருப்பது அவசியம். அதாவது, உடைந்த பொடியான தானியங்கள், குப்பைகள், தூசு போன்றவற்றை அகற்றி எரித்துவிட வேண்டும். விதைகள் மற்றும் தானியங்கள் சேமிக்கும் அறைகளை வேப்பம் புண்ணாக்கு மற்றும் வேப்ப எண்ணெய் கரைசல் போன்றவற்றை கொண்டு மெழுக வேண்டும். மூங்கில் கூடைகளின் மீது வேப்பம் புண்ணாக்கு கரைசலை கெட்டியாக பசைப் போல் தயாரித்து பூச வேண்டும்.

 சேமிக்கும் தானியங்களின் ஈரப்பதம் 14 சதவீதத்துக்கும் குறைவாக இருக்க வேண்டும். சேமிக்கும் விதைகளின் ஈரப்பதம் 8 சதவீதத்துக்கும் குறைவாக இருக்க வேண்டும். நூறு கிலோ நெல் விதைகளை சேமிக்க ஒரு கிலோ வேப்பம் கொட்டை பருப்பு தூள் அல்லது ஒரு கிலோ ஊக்குவிக்கப்பட்ட களிமண் அல்லது ஒரு லிட்டர் வேப்ப எண்ணெய் ஆகியவற்றை கலந்து சேமிக்கலாம். நூறு கிலோ அரிசியை சேமிக்க 12 கிலோ வேப்பம் இலைத்தூள், ஒரு கிலோ வேப்பம் கொட்டை தூள் அல்லது ஒரு லிட்டர் வேப்ப எண்ணெய் (அ) ஒரு கிலோ ஊக்குவிக்கப்பட்ட களிமண் மற்றும் செம்மண், 50 கிராம் போரிக் அமிலம் ஆகியவற்றை பயன்படுத்தி சேகரிக்கலாம். அதேபோல், கோதுமை 100 கிலோ சேமிக்க 5 கிலோ வசம்பு கிழங்கு தூள் பயன்படுத்த வேண்டும். 100 கிலோ மணிலா விதைகளை சேமிக்க 5 கிலோ மஞ்சள் கிழங்கு தூள் கலந்து வைக்க வேண்டும். காய்கறி விதைகளை சேமிக்க துணிப்பைகளையே பயன்படுத்த வேண்டும். ஈரப்பதம் 7 முதல் 8 சதவீதத்துக்கு மேல் இருக்கக் கூடாது. நீண்டகால சேமிப்புக்கு பாலித்தீன் பைகளை பயன்படுத்த வேண்டும். மேலும் ஈரப்பதம் 6 சதவீதம் உள்ளவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். காய்கறி விதைகளை பசுஞ்சாணத்தில் தோய்த்து பின் உலர வைத்து சேமிக்கலாம். நூறு கிலோ உளுந்து, பச்சை பயறு போன்ற பயறு வகைகளை சேமிக்க ஒரு கிலோ ஊக்குவிக்கப்பட்ட களிமண் மற்றும் செம்மண் (அ) 7 கிலோ துளசி இலைத்தூள் அல்லது ஒரு லிட்டர் வேப்ப எண்ணெய் ஆகியவற்றை பயன்படுத்தி சேமிக்கலாம் என்றார் அவர்.

## தமிழகத்தில் மழை தொடர வாய்ப்பு

First Published : 05 Jul 2012 02:33:08 AM IST

சென்னை, ஜூலை 4: தமிழகம், புதுச்சேரியின் சில பகுதிகளில் வியாழக்கிழமையும் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

 சென்னையைப் பொருத்தவரையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது. சில சமயங்களில் தரைக்காற்று பலமாக வீசும். வெப்பநிலை 102 டிகிரி பாரன்ஹீட்டை ஒட்டியிருக்கும்.

தமிழகத்தில் பதிவான மழை அளவு - சென்டி மீட்டரில் (புதன்கிழமை காலை 8.30 மணி நிலவரம்):

கோவை மாவட்டம் வால்பாறை - 6, சின்னக் கல்லாறு - 5, நீலகிரி மாவட்டம் தேவாலா - 4, கூடலூர், தேனி மாவட்டம் பெரியார் அணை, கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை - 2, கன்னியாகுமரி மாவட்டம் பூதபாண்டி, திருநெல்வேலி மாவட்டம் தென்காசி,

பாபநாசம் - 1.

---

தினமலர்

உண்மையின் உரைகல்

**விலையில்லா கால்நடைகளுக்கு வரும் 7ம் தேதி மருத்துவ முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 05,2012,02:49 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், வரும் 7ம் தேதி, பசுக்களுக்கு இன பெருக்க மருத்துவ பரிசோதனையும், ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம்கள் நடக்கிறது.

கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் பாண்டியன் வெளியிட்ட அறிக்கை:தமிழகத்தில் வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த, 31 மாவட்டங்களில், ஒரு லட்சம் பயனாளிக்கு, நான்கு லட்சம் வெள்ளாடுகளும், 21 மாவட்டங்களில், 12 ஆயிரம் பயனாளிகளுக்கு, 12 ஆயிரம் கறவை பசுக்களும் வழங்கப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில், 150 கறவை பசுக்களும், 12,760 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இதுவரை, 100 கறவை பசுக்கள் மற்றும் 1,405 வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளது.

தமிழகம் முழுவதும் வழங்கப்பட்ட விலையில்லா கால்நடைகளுக்கான, மருத்துவ முகாம் நடக்கிறது. தர்மபுரி மாவட்டத்தில், வரும் 7ம் தேதி மருத்துவ முகாம் நடக்கிறது. கறவை பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருத்துவ முகாம் நடக்கிறது. பயனாளிகள், கால்நடைகளை முகாமில் கொண்டு வந்து உரிய சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு அழைப்பு ரூ. 30ல் விதை பரிசோதனை

பதிவு செய்த நாள் : ஜூலை 05,2012,02:55 IST

ஈரோடு: "விதை தரமாக இருந்தால்தான், உரம், பூச்சி மருந்து போன்றவை முழு பலன் தரும்," என, ஈரோடு விதை பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் யசோதா தெரிவித்துள்ளார்.
அவரது அறிக்கை: விவசாயத்தில் அதிக மகசூல் பெற, சரியான பயிர் எண்ணிக்கை பராமரித்தல் மிக அவசியம். விதை தரமாக இல்லாவிடில், பயிர் எண்ணிக்கை குறைந்து, நஷ்டத்தை ஏற்படுத்தும்.
ஆடிப்பட்டம் விவசாயத்துக்கு முக்கியமானது. விவசாயிகள், விதை விற்பனையாளர்கள் பட்டத்தில், விதைப்பதற்காகவும், விற்பனைக்காகவும் இருப்பு வைத்துள்ள நெல், சோளம், மக்காசோளம், பயறு வகைகள், காய்கறி பயிர் விதைகளை தக்க முறையில் விதை பரிசோதனை செய்து கொள்வது அவசியம். விதை பரிசோதனை செய்ய, ஈரோடு, சத்தி ரோட்டில் உள்ள, விதை பரிசோதனை நிலையத்தில், ஒரு மாதிரிக்கு, 30 ரூபாய் கட்டணத்தில், விதை தூய்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம், பிற ரக கலப்பு ஆகியவற்றை கண்டு அறியலாம்.

## மக்காச்சோளம் விதைத்தால் நல்ல லாபம் ஏற்றுமதி சந்தை மைய இயக்குனர் தகவல்

பதிவு செய்த நாள் : ஜூலை 05,2012,03:42 IST

கருத்தை பதிவு செய்ய
கரூர்: "ஆடிப்பட்டத்தில் மக்காச்சோளம் விதைத்தால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும்' என, வேளாண் பல்கலை உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை மைய தகவல் இயக்குனர் அஜ்ஜன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ஆடிப்பட்டத்தில் மானாவாரி பயிர்களை விவசாயிகள் விதைப்பது வழக்கம். நடப்பாண்டு தென்மேற்கு பருவமழை பெரும் உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்தாண்டு தமிழகத்தில் மக்காச்சோளம் சாகுபடி குறைவாக இருந்தது. இதனால் பீகாரில் இருந்து விற்பனைக்கு வந்த மக்காச்சோளம் ஒரு குவிண்டாலுக்கு 1,200 ரூபாய் வரை விற்றது. கோழிப்பண்ணை நிறுவனங்கள் பீகாரில் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட 12 சதவீத ஈரப்பதம் உள்ள மக்காச்சோளம், தமிழகத்தில் விளையும் தரத்திற்கு இணையாக இருந்தது. இதனால் தமிழகத்தில் உள்ள கோழிப்பண்ணை நிறுவனங்கள் வரும் மூன்று மாதங்களுக்கு தேவையான மக்காச்சோளத்தை கொள்முதல் செய்து இருப்பு வைத்துள்ளனர்.
கர்நாடகா மாநிலத்தில் வரும் ஆகஸ்ட் மாத இறுதியில் புதிய மக்காச்சோளம் வர துவங்கும்.

அதன்விலை ஒரு குவிண்டால் 1, 100 ரூபாய் முதல் 1,150 ரூபாய் வரை இருக்கும். மேலும், திருப்பூர் மாவட்டம் உடுமலை சந்தையில் கடந்த 18 ஆண்டுகளில் நிலவிய மக்காச்சோளம் விலைகளும் ஆய்வு செய்யப்பட்டது. வர்த்தகர்களிடமும் மக்காச்சோளம் விலை பற்றிய புள்ளி விபரங்கள் சேகரிக்கப்பட்டன. அதன் அடிப்படையில் வரும் அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை மக்காச்சோளம் ஒரு குவிண்டாலுக்கு 1,100 ரூபாய் முதல் 1,150 ரூபாய் வரை விலை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, ஆடிப்பட்டத்தில் மக்காச்சோளத்தை சாகுபடி செய்தால் வரும் அக்டோபர் மாதங்களில் அறுவடை செய்யும் போது விவசாயிகளுக்கு எதிர்பார்த்த அளவில் திருப்திகரமான விலை கிடைக்க வாய்ப்புண்டு. இதனால் விவசாயிகள் மக்காச்சோளத்தை பயிரிடலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**பருவமழை தாமதத்தால் விவசாயிகள்கவலை**

பதிவு செய்த நாள் : ஜூலை 04,2012,22:46 IST

கருத்தை பதிவு செய்ய

திண்டுக்கல்:மாவட்டத்தில் கடந்த ஆறு மாதத்தில் பெய்யவேண்டிய சராசரி மழை அளவில் 117 மி.மீ., குறைவாக பெய்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். திண்டுக்கல் மாவட்டத்தில் ஜனவரியில்

33.9 மி.மீ., பிப்ரவரியில் 10.8 மி.மீ., மழை என, மொத்தம் 44.7 மி.மீ., சராசரியாக பெய்யவேண்டும் (கொடைக்கானல் மலை பகுதி தவிர்த்து). இந்த ஆண்டு ஜனவரியில் 1.63 மி.மீ., பிப்ரவரியில் 0.40 மி.மீ.,

என மொத்தம் 2.03 மி.மீ., மட்டுமே பெய்துள்ளது. சென்ற ஆண்டு குளிர்பருவமான ஜன., பிப்., மாதங்களில் மொத்தம் 36.61 மி.மீ., பெய்துள்ளது.

கோடை பருவம்:

மார்ச், ஏப்ரல், மே மாதங்கள் கோடைபருவமாக கணக்கிடப்படுகிறது. இதில் மாவட்டத்தில் சராசரி மழை அளவாக மார்ச்-15.7, ஏப்ரல்-61.0, மே-78.4 மி.மீ., என மொத்தம் 155.1 மி.மீ., பெய்யவேண்டும். இந்த

ஆண்டு மார்ச் -3, ஏப்ரல்-46.38, மே-59.38 மி.மீ., என மொத்தம் 108.74 மி.மீ., மழை பெய்துள்ளது.46 மி.மீ., குறைவாக பெய்துள்ளது. சென்ற ஆண்டு இந்த பருவத்தில் அதிகபட்சமாக, சராசரி மழை

அளவையும் கடந்து 286 மி.மீ., மழை பெய்தது.
தென்மேற்கு பருவம்:
ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்., மாதங்கள் தென்மேற்கு பருவமாக கணக்கிடப்படுகிறது. இந்த பருவத்தில் சராசரி மழை அளவு 218.3 மி.மீ., ஜூன் மாத சராசரி மழை 32.3 மி.மீ., ஆனால் கடந்த மாதம் பெய்த

தோ 5.07 மி.மீ., மட்டுமே. இந்த ஆண்டு ஜூன் வரை பெய்யவேண்டிய மழை அளவு 232.1 மி.மீ., ஆனால் பெய்ததோ 115.84 மி.மீ., மழை மட்டுமே.கவலை: ஜூலை துவங்கிய நிலையிலும் தென்மேற்கு

பருவமழை துவங்காதது விவசாயிகளை கவலையடைய செய்துள்ளது. ஜூலை 15 க்குள்ளாவது மழை பெய்தால் தான், ஆடிப்பட்டத்தை தேடி விதைக்க முடியும் என்ற நிலையில் விவசாயிகள் உள்ளனர்.
நகர்புறங்களில் பத்து நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. மழை பெய்தால் வாரத்திற்கு இருமுறையாவது குடிநீர் வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் மக்கள்

---

தினகரன்

கொப்பரை தேங்காய் கொள்முதல் நிலையம் கோரி விவசாயிகள் முற்றுகை

பதிவு செய்த நேரம்:2012-07-04 12:35:04

சிவகங்கை, : கொப்பரை தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க வலியுறுத்தி 100க்கும் மேற்பட்ட தென்னை விவசாயிகள் நேற்று சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.
தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்கத் தலைவர் கணநாதன், செயலாளர் முத்துச்சாமி, பொருளாளர் ராமையா அம்பலம், விவசாய சங்க மாவட்டத் தலைவர் ஆதிமூலம், செயலாளர் தண்டியப்பன், முன்னோடி விவசாயி பாண்டி ஆகியோர் தலைமையில் திருப்புவனம் பகுதியை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட தென்னை விவசாயிகள் நேற்று சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். திருப்புவனம் பகுதியில் கொப்பரை தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க வலியுறுத்தி அவர்கள் கலெக்டர் ராஜாராமனிடம் மனு கொடுத்தனர். அந்த மனுவில்

கூறியிருப்பதாவது:
திருப்புவனம் வட்டாரத்தில் 2 ஆயிரம் ஏக்கரில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. விலை வீழ்ச்சி காரணமாக ஒரு தேங்காய் ரூ.2க்கு விற்கப்படுகிறது. ஆனால் தென்னை சாகுபடிக்கான செலவினங்கள் அதிகரித்துள்ளன. இத னால் விவசாயிகள் பெரிய அளவில் நஷ்டம் அடைந்துள்ளனர். எனவே திருப்புவனத்தில் அரசு சார்பில் கொப்பரை தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும். உரித்த தேங்காய் கிலோ ரூ.25க்கும், ஒரு கிலோ கொப்பரை தேங்காயை ரூ.70க்கும் அரசே கொள்முதல் செய்ய வேண்டும்.
யூரியா, சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் போன்ற உரங்களையும், பூச்சிக்கொல்லி மருந்துகளையும் இலவசமாக வழங்க வேண்டும். தென்னை உபத் தொழில்களை தொடங்க மானியத்துடன் கடன்கள் வழங்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.
தென்னை விவசாயிகள் சங்க தலைவர் கணநாதன் கூறுகையில், “திருப்புவனத்தில் கொள்முதல் நிலையம் அமைக்கப்படுவதாக மாவட்ட நிர்வாகம் உறுதியளித்தது. ஆனால் இதுவரை கொள்முதல் நிலையம் அமைக்கப்படவில்லை. இதனால் காங்கேயத்தில் உள்ள கொள்முதல் நிலையத்திற்கு கொப்பரை தேங்காய்களை கொண்டு செல்ல வேண்டிய நிலை உள்ளது. தென்னை மரங்களின் பராமரிப்பு செலவு, தேங்காய்களின் விலையை விட அதிகமாக உள்ளது. இதனால் தென்னை விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே தேங்காயின் விலையை அதிகரிக்கவும், கொள்முதல் நிலையம் அமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்‘ என்றார்.

## பீன்ஸ், கேரட் கிலோ ரூ.55 காய்கறி விலை கடும் உயர்வு பச்சைமிளகாய் கிலோ ரூ.70ஐ தாண்டியது

பதிவு செய்த நேரம்:2012-07-04 10:18:42

கரூர், : கரூரில் காய் கறி விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளது. பீன்ஸ், கேரட் கிலோ ரூ.55, பச்சைமிளகாய் கிலோ ரூ.70 ஐ தாண்டியது
கரூர் மாவட்டத்தில் காய்கறி விலைகள் கடந்த ஒரு மாதமாக உயர்ந்து வந் தது. கடந்த சில நாட்களாக மேலும் விலை உயர்ந்து வருகிறது.
கத்தரிக்காய், வெண்டைக்காய், தக்காளி ஆகி யவை தலா கிலோ ரூ.25க்கு கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது. புடலங்காய், முள்ளங்கி போன்ற நாட்டுக்காய்கறிகள் கிலோ ரூ.20க்கு விற்பனையாகிறது.
நாட்டுக் காய்கறிகளின் நிலை இப்படியென்றால் மலைக் காய்கறிகளின் விலை எட்டாத உயரத்துக்குப் போய்விட்டது. பீன்ஸ், கேரட் போன்றவை கிலோ ரூ.55 ஆகிவிட்டது. முட்டைக்கோஸ், உருளைக்கிழங்கு கிலோ ரூ.40 என உயர்ந்துவிட்டது. கடந்தாண்டு

வெங்காயத்தின் விலை கடுமையாக உயர்ந்தது. தற்போது வெங்காயம் விலை பல்லாரி ரூ.20, சின்னவெங்காயம் ரூ.35 என உள்ளது. ஆனால், இந்த ஆண்டு பச்சை மிளகாய் விலை கடுமையாக உயர்ந்துவிட்டது. கிலோவுக்கு ரூ.70 என உயர்ந்துவிட்டது. சம்பா மிளகாய் எனப்படும் மற்றொரு ரகம் ரூ.60க்கு விற்பனை செய்யப்படுகிறது.
மிளகாய் விலையை போலவே இஞ்சியின் விலை யும் அதிகரித்துவிட்டது 3 மாதத்திற்கு முன்னர் ரூ.20 ஆக இருந்த இஞ்சி தற்போது ரூ.44 என உழவர்சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது. ரூ.16 ஆக இருந்த உருளைக்கிழங்கு ரூ.30 எனவும், ரூ.26 ஆக இருந்த கேரட் தற்போது ரூ.44 எனவும், ரூ.24க்கு விற்ற முட்டைக்கோஸ் ரூ.32 ஆகவும் உழவர்சந்தைகளிலேயே விற்பனை செய்யப்படுகிறது. கடைகளில் இந்த விலையை விட குறைந்தது கிலோவுக்கு ரூ.10 அதிகமாக வைத்து விற்பனை செய்கின்றனர்.
காய்கறிகளின் விலை உயர்ந்துள்ளதால் பெண்கள் காய்களை வாங்கி சமைக்க முடியாமல் தவிக்கும் நிலைக்கு ஆளாகியுள்ளனர். கீரைகள், நாட்டுக்காய்கறிகளான சுரைக்காய், புடலங்காய், பூசணிக்காய் கீற்றுகளை வாங்கி சமாளிக்க வேண்டியது தான். காசு கொடுத்து வாங்குகிற அளவுக்கு காய் விலை இல்லை என பெண்கள் தெரிவித்தனர்.

## மஞ்சள் விலை குவின்டால் ஒன்றுக்கு ரூ200 வரை அதிகரிப்பு

பதிவு செய்த நேரம்:2012-07-04 10:15:04

ஈரோடு,: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்களில் கடந்த சில நாட்களாக விலை மெல்ல உயர்ந்து கொண்டு வருகிறது. இதனிடையே கடந்த வாரம் அரசு சார்பில் மஞ்சள் கொள் முதல் துவங்கப்பட்டது. குவிண்டாலுக்கு ரூ.4 ஆயிரம் என்ற அளவில் மஞ்சள் கொள்முதல் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிமார்க்கெட்டுகளை விட அரசு கொள்முதல் விலை குறைவாக உள்ளதால் விவசாயிகள் ஏமாற்றத்துடன் இருந்து வந்தனர்.
நேற்று ஒரே நாளில் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு ரூ.200 வரை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நேற்று ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விரலி மஞ்சள் ரூ.3569 முதல் ரூ.4215 வரையிலும், கிழங்கு ரூ.3591 முதல் ரூ.4019 வரையிலும் விற்பனையானது. இது நேற்று முன்தின விலை யை விட ரூ.200 கூடுதல் ஆகும். இதே போல வெளிமார்க்கெட் எனப்படும் தனியார் மஞ்சள் வணிகர்கள் சார்பில் நடத்தப்படும் மார்க்கெட்டிலும் நேற்று சற்று விலை உயர்ந்து விற்பனையானது. விரலி மஞ்சள் ரூ.2499 முதல் ரூ.4149 வரையிலும், கிழங்கு மஞ்சள் ரூ.2209 முதல் ரூ.3881 வரையிலும் விற்பனையானது. இது நேற்று முன்தின விலையை விட  ரூ.140 கூடுதல் ஆகும். ஒழுங்குமுறை மற்றும் வெளிமார்க்கெட் இரண்டிலும் விலை உயர்ந்தால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

வாழையை தாக்கும் தண்டு கூன்வண்டை கட்டுப்படுத்துவது எப்படி வேளாண் அதிகாரி விளக்கம்

பதிவு செய்த நேரம்:2012-07-04 11:54:12

சேதுபாவாசத்திரம்,: வாழையில் பெருமளவு சேதம் விளைவிக்கும் தண்டு கூன்வண்டை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றி சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மதியரசன் விளக்கமளித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: வாழையில் பெருமளவில் சேதத்தை விளைவிக்கும் பூச்சிகளில் மிக முக்கியமானது தண்டு கூன்வண்டாகும். இதனை கட்டுப்படுத்த நீம்-அசால் 1.2 சத மருந்தை ஊசி மூலம் தண்டுகளில் செலுத்தி கட்டுப்படுத்தலாம். இந்த மருந்தை வாழைக்கன்று நட்ட 5 மாதத்திற்குபின் 30 நாட்கள் இடைவேளையில் 3 முறை தண்டில் செலுத்த வேண்டும். நீம்-அசால் மருந்தினை நீருடன் 4:4 என்ற விகிதத்தில் கலந்து, அதாவது 4 மில்லி மருந்துடன் 4 மில்லி தண்ணீர் என்ற அளவில் கலந்து தண்டினுள் செலுத்த வேண்டும். இதன் மூலம் கூன்வண்டின் தாக்குதல் 85.42சதம் வரை கட்டுப்படுத்தப்படுகிறது. அதேபோன்று மோனோகுரோட்டபாஸ் 1 மில்லி மருந்துடன், 3 மில்லி தண்ணீர் கலந்து தண்டுகளில் ஊசி மூலம் செலுத்தியும் இவ்வண்டினை கட்டுப்படுத்தலாம். இம்முறையில் 92.8சதவீதம் வரை பூச்சிதாக்குதல் கட்டுப்படுத்தப்படுகிறது. இத்துடன் சுற்றுப்புற சூழலும் மாசுபடாமல் பாதுகாக்கப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.